## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 83/2015

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பெஞ்ச் கிளார்க் திரு. இராஜா முகம்மது அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **27.11.2025** |
| **பெயர்** | **பன்னீர்செல்வம்** |
| **த/பெ** | **கண்ணுசாமி** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.29 எ.எம்.**

**குறுக்கு விசாரணைதொடர்ச்சி–**

4. இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள பட்டாவான வா.சா.ஆ 1 என் பெயர் இல்லை என்றால் சரிதான். வழக்குசொத்தில் என்படி பட்டாவில் குறிப்பிட்டுள்ள 23 நபர்களுக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். என்னை தவிர மற்ற 22 நபர்களும் இவ்வழக்கின் வாதிகளாக இல்லை என்றால் சரிதான். இந்த பட்டாவை தவிர வழக்கு சொத்திற்கு நான் தான் உரிமையாளர் என்று காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. தாவா சொத்தில் பிரதிவாதிகள் குடியிருப்பதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் பிரதிவாதிகள் சர்வே எண் 297–ல் உள்ள தேசிய நெடுஞ்சாலைக்கு சொந்தமான இடத்தில் தான் குடியிருக்கிறார்கள். பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பை நிரூபிக்க இந்த வழக்கில் வழக்கறிஞர் ஆணையரை நியமித்து நிலத்தை அளக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றும் அதற்கு முரணாக மற்றொரு சங்கதியாக பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் 5 வருடம் கால அவகாசம் கேட்டு வழக்கு சொத்தில் இருப்பதாக கேட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

6. 1969 ல் என் தாயார் வழக்கு சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணமானது வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டு அதன் கிழக்கு பக்கத்தில் சுப்பையா நிலம் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற 1969 ஆண்டிற்கு முன்பே பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது பிரமாணவாக்குமூலத்தில் பிரதிவாதிகள் கிராம பெரியவர்கள் அனுமதிக்கப்பட்டதின் பெயரில் பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் குடியிருந்தார்கள் என்று குறிப்பிட்டு அவர்களின் பெயரை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் பள்ளி இருந்ததாக குறிப்பிட்டு இருந்தபோது அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றா'ல சரிதான்.

7. என் வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் எந்த மாதம், எந்த வருடம் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அதேபோல் பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்து வருவாய் துறையிலும், காவல் நிலையத்திலும் தொடர்ந்து புகார் கொடுத்தோம் ஆனால் அதன் பெயரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் அளித்த புகாரில் எந்த முகாந்தரமும் இல்லாத காரணத்தினால் தான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் பிரதிவாதிகள் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து எங்கள் நிலத்திற்கு ஆக்கிரமித்து வந்த காரணத்தினால் தான் புகார் அளித்தோம்.

8. எ அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் எந்த ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது என்று தடை உத்தரவு மனு செய்து அது தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த மனுவை எதிர்த்து வாதிகள் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். என் வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் மற்றொரு அசல் வழக்கு எண் 278/2000 என்று தாக்கல் செய்தனர் என்று குறிப்பிட்டு இருந்தால் சரிதான். பிரதிவாதிகளுக்கு சொந்தமான சர்வே எண் 297 பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றால் சர்வே எண் 297 குறித்து வாதிகளுக்கு எந்த தொடர்பும் இல்லை மேற்கூறிய அசல் வழக்கு பிரதிவாதிகள் வராமல் இருந்த காரணத்தினால் தான் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

9. பிரதிவாதிகள் எந்த தேதி, எந்த மாதம் வீட்டினை ஒப்படைப்பதாக எனது வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஊர் பெரியவர்கள் தான் பிரதிவாதிகளை வெளியேற்ற முயற்சித்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளபோது நானோ, மற்ற வாதிகளோ நேரடியாக கேட்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளை வழக்கு சொத்தில் இருந்து காலி செய்ய எந்த வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். காலி

செய்ய கேட்டோம். வாதிகள் நீதிமன்ற ஆணையரை நியமிக்க எந்த மனுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் வாதிகள் ஏற்கனவே தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 55/2005 என்ற வழக்கில் உள்ள ஆணையர் அறிக்கையையே வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்சொன்ன அசல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. பகுதியாக தீர்ப்பானது. மேற்சொன்ன வழக்கிலும் சர்வே எண் 295/3எ2 அமைந்துள்ள சொத்தினை அவ்வழக்கின் பிரதிவாதியான கலைசெல்வன் அத்து மீறக் கூடாது என்று தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த சர்வே எண்ணும் இந்த வழக்கின் சர்வே எண்ணும் ஒன்று தான் என்றால் சரிதான். இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதியான கலைசெல்வன் என்பவரும் பர்மா அகதி என்றால் சரிதான்.

10. 1ம் பிரதிவாதி பர்மா அகதி என்ற பெயரில் வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்றால் கிராமத் தலைவர் என்ற முறையில் அவரும் வருகிறார். மேற்கூறியவாறு பர்மா அகதிகளின் தலைவராக உள்ள 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் வரக்கூடாது என்று நீதிமன்றத்தை அனுகும் போது அந்த தீர்ப்பானது என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து செங்குன்றம் பிரதான சாலையை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சந்தை மதிப்பு அதிகாமாக உள்ள காரணத்திால் அதனை அபகரிக்கும் நோக்கத்துடன் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்தனர் என்றால் சரியல்ல.

11. மேற்கூறிய அசல் வழக்கு எண் 55/2005ல் தீர்ப்பானது இவ்வழக்கின் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் வழக்கு மூலம் எழு வேண்டும் என்ற நோக்கத்தோடு பொய்யான வழக்கு மூலத்தை உருவாக்கி உள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தில் 27 சதுர மீ ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் காலி ஸ்வாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று எந்த வித வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பாத காணரத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

12. வழக்கு சொத்தை நான் கிரையம் பெறுவதற்கு முன்பே பிரதிவாதிகள் ஸ்வாதீனத்தில் உள்ளதாக வாதிகள் தரப்பு ஆவணமான வா.சா.ஆ 1ல் சுப்பையா மனை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அருகாமையில் என் இடம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை, என் சொத்தோடு சேர்க்க வேண்டும் என்ற காரணத்தினால் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீண்ட நாட்களாக வழக்குகள் நடந்து வருவதால் சுப்பையாவையே கொலை

செய்துவிட்டார்கள் என்றால் அது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. வழக்கு சொத்தில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இலலை என்றும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.06.p.m.**